# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No. 63/2018 |
| Preliminary register | |
| Sessions | |
| Deposition Of Witness for | Prosecution PW 5<br>Defense<br>Court |
| Name | திரு. கிருஷ்ணமூர்த்தி |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

*எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.*

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21st day of July 2026.

நான் தற்போது களக்காடு காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 31.08.2017 ஆம் தேதி 18.00 மணிக்கு முதல்நிலை காவலர் கணேசன் என்பவர் நிலையபொறுப்பில் இருக்கும் போது நான்குநேரி சுப்பிரமணியபுரத்தை சேர்ந்த பேச்சியம்மாள் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைகேற்ப குற்ற எண். 363/2017 இதச பிரிவுகள் 294(பி), 506(2) மற்றும் 4 of TNPHW Act என்ற வழக்கை பதிவு செய்துள்ளார். அந்த புகார் மனு **அ.சா.ஆ.3** ஆகும். முதல் தகவலறிக்கை **அ.சா.ஆ.4** ஆகும்.

புகார் மனுவை அசல் தகவலறிக்கையுடன் இணைத்து கனம் நான்குநேரி நீதிமன்றம் அனுப்பியும் சம்மந்தப்பட்ட நகல்களை உயர்

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.21 18:02:26 +0530

அதிகாரிகளுக்கு அனுப்பியும், விசாரணை நகலை உதவி ஆய்வாளர் வேல்குமார் அவர்கள் பார்வைக்கு வைத்துள்ளார். அவர் விசாரணை நகலை எடுத்துகொண்டு 31.08.2017 ஆம் தேதி 19.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறங்களையும் சாட்சிகள் தேவேந்திரன், சந்துரு ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.5** ஆகும். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.6** ஆகும்.

சாட்சிகள் பேச்சியம்மாள், பேச்சிமுத்து, சிவனு, தேவேந்திரன், சந்துரு, கணேசன் ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களுடைய வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளார்.

எதிரி திருநெல்வேலி மாண்பமை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்று நீதிமன்றத்தில் சரணடைந்து பின் வெளியே சென்றுள்ளார்.

புகார் மனுவின் அடிப்படையில் புலன் விசாரணையிலும் எதிரி குற்றபுரிந்தது உண்மை என தெரியவந்ததால் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 506(2) மற்றும் 4 of TNPHW Act ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரரிடம் எழுதாத வெள்ளைதாளில் கையெழுத்து வாங்கிக்கொண்டு புகார் என்னால் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. சொன்ன நாள், இடம், விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கை சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரி மீது வழக்கு தாக்கல் செய்து குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.21 18:02:32 +0530